ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஐயபுழுதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஐயபுழுதி ॥

மாயன்மேல் மகள் மாலுறுகோலம் தாயவன் கூறல்

‡ஐய புழுதி உடம்பளைந்து⋆ இவள் பேச்சும் அலந்தலையாய்⋆
செய்ய நூலின் சிற்றாடை⋆ செப்பன் உடுக்கவும் வல்லள் அல்லள்⋆
கையினில் சிறுதூதை யோடு⋆ இவள் முற்றில் பிரிந்தும் இலள்⋆
பை அரவணைப் பள்ளியானோடு⋆ கைவைத்திவள் வருமே (1)

வாயில் பல்லும் எழுந்தில⋆ மயிரும் முடி கூடிற்றில⋆
சாய்விலாத குறுந்தலைச்⋆ சில பிள்ளைகளோடிணங்கி⋆
தீ இணக்கிணங்காடி வந்து⋆ இவள் தன் அன்ன செம்மை சொல்லி⋆
மாயன் மா மணிவண்ணன் மேல்⋆ இவள் மால் உறுகின்றாளே (2)

பொங்கு வெண்மணல் கொண்டு⋆ சிற்றிலும் முற்றத்திழைக்கலுறில்⋆
சங்கு சக்கரம் தண்டு வாள்⋆ வில்லும் அல்லதிழைக்கலுறால்⋆
கொங்கை இன்னம் குவிந்தெழுந்தில⋆ கோவிந்தனோடிவளைச்⋆
சங்கை யாகி என் உள்ளம்⋆ நாள்தொறும் தட்டுளுப்பாகின்றதே (3)

ஏழை பேதை ஓர் பாலகன் வந்து⋆ என்
பெண் மகளை எள்கி⋆
தோழிமார் பலர் கொண்டு போய்⋆ செய்த
சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்⋆
ஆழியான் என்னும் ஆழ மோழையில்⋆
பாய்ச்சி அகப்படுத்தி⋆
மூழை உப்பறியாதென்னும்⋆
மூதுரையும் இலளே (4)

நாடும் ஊரும் அறியவே போய்⋆ நல்ல துழாய் அலங்கள்
சூடி⋆ நாரணன் போம் இடம் எல்லாம்⋆ சோதித்துழிதர்கின்றாள்⋆
கேடு வேண்டுகின்றார் பலர் உளர்⋆ கேசவனோடிவளைப்⋆
பாடு காவல் இடுமின் என்றென்று⋆ பார் தடுமாறினதே (5)

பட்டம் கட்டிப் பொற்றோடு பெய்து⋆ இவள்
பாடகமும் சிலம்பும்⋆
இட்ட மாக வளர்த்தெடுத்தேனுக்கு⋆
என்னோடிருக் கலுறாள்⋆
பொட்டப் போய்ப் புறப்பட்டு நின்று⋆ இவள்
பூவைப் பூவண்ணா என்னும்⋆
வட்ட வார் குழல் மங்கைமீர்!⋆ இவள்
மால் உறுகின்றாளே (6)

பேசவும் தரியாத பெண்மையின்⋆ பேதையேன் பேதை இவள்⋆
கூசமின்றி நின்றார்கள்⋆ தம் எதிர் கோல் கழிந்தான் மூழையாய்⋆
கேசவா என்றும் கேடிலீ என்றும்⋆ கிஞ்சுக வாய் மொழியாள்⋆
வாச வார்குழல் மங்கைமீர்!⋆ இவள் மால் உறுகின்றாளே (7)

காறை பூணும் கண்ணாடி காணும்⋆ தன்
கையில் வளை குலுக்கும்⋆
கூறை உடுக்கும் அயர்க்கும்⋆ தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்⋆
தேறித் தேறி நின்றாயிரம் பேர்த்⋆
தேவன் திறம் பிதற்றும்⋆
மாறில் மா மணிவண்ணன் மேல்⋆ இவள்
மால் உறுகின்றாளே (8)

கைத்தலத்துள்ள மாடழியக்⋆
கண்ணாலங்கள் செய்து⋆ இவளை
வைத்து வைத்துக் கொண்டென்ன வாணிபம்⋆
நம்மை வடுப்படுத்தும்⋆
செய்த்தலை எழு நாற்றுப் போல்⋆ அவன்
செய்வன செய்து கொள்ள⋆
மைத் தடமுகில் வண்ணன் பக்கல்⋆
வளர விடுமின்களே (9)

பெருப் பெருத்த கண்ணாலங்கள் செய்து⋆
பேணி நம் இல்லத்துள்ளே⋆

இருத்துவான் எண்ணி நாம் இருக்க⋆
இவளும் ஒன்றெண்ணுகின்றாள்⋆
மருத்துவப் பதம் நீங்கினாள் என்னும்⋆
வார்த்தை படுவதன் முன்⋆
ஒருப்படுத்திடுமின் இவளை⋆
உலகளந்தான் இடைக்கே (10)

‡ஞால முற்றும் உண்டாலிலைத் துயில்⋆
நாராயணனுக்கு⋆ இவள்
மாலதாகி மகிழ்ந்தனள் என்று⋆
தாய் உரை செய்ததனை⋆
கோலம் ஆர் பொழில் சூழ் புதுவையர்கோன்⋆
விட்டுசித்தன் சொன்ன⋆
மாலை பத்தும் வல்லவர்கட்கு⋆
இல்லை வரு துயரே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥